**இரத்தினபுரி பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினபுரி பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் இரத்தினபுரி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டு மேற்கொண்ட 02 வேலைகளிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 1,842,052 ஆன மூலதன வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். 2022 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதாக. | ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் கடந்த ஆண்டு சீராக்கங்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக அன்பளிப்பாக கிடைத்த கிரயம் ரூபா 703,866 ஆன இயந்திர உபகரணங்களிற்காக நிதி செயலாற்றல் கூற்றில் செம்மையாக்கம் செய்யப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். 2022 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதாக. | ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியளவில் மல்வல பொது மலசலகூடத் தொகுதியை நிர்மாணிக்க ரூபா 3,754.844 செலவிட்டு அனைத்து மதிப்பீட்டு வேலைகளையும் பூர்த்தி செய்திருந்த போதும், அக் கிரயத்தை மூலதனமாக்கி இருக்கவில்லை. | 2022 ஆண்டில் பெறுமதியை மதிப்பிட்டு மூலதனமாக்குவதாக. | மூலதன செலவுகள் மூலதனமாக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 06 கணக்கு விடயங்களிற்கு உரியதாக மீளாய்வாண்டு இறுதி நிதிக்கூற்றுகளின் பிரகார மீதி மற்றும் துணை பதிவேடுகளிலான மீதிகளிற்கிடையில் ரூபா 19,971,420 ஆன வித்தியாசம் நிலவியது. | நீண்ட காலமாக நிலவிவரும் இணக்கமின்மைகளை கடந்த ஆண்டு பதிவேடுகளுடன் ஒப்பிட்டு குறைகளை இனங்கண்டு சரிசெய்வதாக மற்றும் தொடர்ந்தும் காணப்படும் இனங்கமின்மைகளை எதிர்காலத்தில் சரிசெய்வதாக. | நிதி நிலைமை கூற்றில் காட்டப்படும் சொத்துக்களின் பெறுமதிகள் அவற்றுடன் தொடர்புடைய அட்டவணைகளுடன் இனங்கசு செய்ய வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 371(5) | 2005 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலப்பகுதியில் மாகாண சபை வேலைகள், விஷேட நிகழ்ச்சித் திட்டம், வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளல், வாகன பராமரிப்பு வேலைகளிற்கு வழங்கியிருந்த ரூபா 1,202,640 ஆன முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2005 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரயதாக சுட்டிக் காட்டியுள்ள ரூபா 1,202,640 தொகை தீர்க்கப்படவுள்ளது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 571(2) | 2010 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலத்திற்குரிய பெறுமதி ரூபா 5,756,317 ஆன வேலை வைப்புக்கள் மற்றும் நானாவித வைப்புக்களிற்குரிய காலம் கடந்த | 2010 முதல் நிலவிய வேலை வைப்புக்களை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும், 2018 ஆண்டிறுதி வரை நிலவிய அநேகமான | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வைப்புக்களை வருமானத்திற்கு எடுத்ததாகவும், மேலும் காணப்படும் 2 ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்களை வருமானத்திற்கு எடுக்க விடய பொறுப்பு அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 13,402,031 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 7,243,694 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **ஏனைய வருமானங்கள்** | | |
| மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகளிற்குரியதாக 32 அறிவித்தல் பலகைகளிற்கு கூட்டுத் தொகை ரூபா 477,100 ஆன வருமானமொன்று நிலுவையாக காணப்பட்டதுடன், சபையின் செயற்பாடுகள் பலவீனமானதால் நிலுவை வருமானத்தை அறவிட இயலாதிருந்தது. | வருட ஆரம்ப தினத்திலிருந்து செலுத்துமாறு எழுத்துமூலம் அறிவித்து நினைவூட்டலும் அனுப்பிய போதும், அநேகமான நிறுவனங்கள் கொடுப்பனவை புறக்கணிக்கின்றன. இறுதியில் செலுத்தாத அறிவித்தல் பலகைகளை கலற்றி அகற்றுவதுடன், குறித்த நிறுவனம் பணம் செலுத்தி அவ் அறிவித்தல் பலகைகளை எடுத்துச் செல்லாது. அந் நிலைமையில் அறிவித்தல் பலகை வருமானம் சபைக்கு இழக்கப்படுவதாக. | உயர் கள விபரங்கள் மூலம் உரிய வருமானத்தை அறவிட முயற்சி எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**3.1 பயன்படுத்தப்படாத அல்லது குறைபயன்பாட்டு சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஜுலை 02 திகதி தேவையின்றி கொள்வனவு செய்த ரூபா 135,000 பெறுமதியான வளிப் பதனாக்கி (18000BTU) கணக்காய்வு திகதி 2022 ஏப்ரல் 05 திகதியளவில 02 ஆண்டுகளிற்கு அதிக காலமாக களஞ்சியத்தினுள் விளைவற்று காணப்பட்டது. | தவிசாளரிற்காக தயாரிக்க திட்டமிட்டுள்ள அறைக்கு பொருத்த கொள்வனவு செய்யப்பட்டதாகவும், சபையின் நிதி நிலைமை சீரான போதும், அத்தியவசிய செலவுகளிற்காக பணம் செலவிட வேண்டியுள்ளதால் இயற்திரம் விளைவற்று காணப்படுவதாக. | தேவையை சரியாக மட்டும் காலரீதியாக இனங்கண்டு கொள்வனவு செய்ய வேண்டும் |
| (ஆ) | வீதி விளக்குகள் பெறுவனவு மற்றும் விநியோகம் தொடர்பாக முறையான பதிவேடொன்ளை பேணியிருக்கவில்லை. 2021 ஜுலை மற்றும் நவம்பர் மாதங்களில் கூட்டுத் தொகை ரூபா 1,230,455 ஆன 2454 வீதி விளக்கு அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கணக்காய்வு திகதிய 2022 ஏப்ரல் 05 திகதியளவிலும் கொள்வனவு செய்து 06 மாதம் முதல் 10 மாதங்கள் வரை காலம் சென்ற ரூபா 1,046,145 பெறுமதியான 1936 அலகு வீதி விளக்குகள் களஞ்சியத்தினுள் விளைவற்று நிலவின. | வீதி விளக்கு பதிவேட்டின் குறைகளை சரிசெய்ய விடய பொறுப்பு அலுவலர்களை அறிவூட்டுவதாக மற்றும் கணக்காய்வு திகதியளவில் அந்த வீதி விளக்கு உறுப்படிகள் விளைவற்று காணப்பட்டதாக. | தேவையை சரியாக இனங்கண்டு கொள்வனவு செய்து நோக்கத்திலான செயற்பாடுகளிற்கு பயன்படுத்த துரித வழிவகைகளை எடுக்க வேண்டும் |

**3.2 வாகனத் தொகுதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| தவிசாளரின் பயணத்திற்காக பயன்படுத்தும் கெப் வண்டிக்கு 2020 மே 06 திகதி பொருத்திய 04 டயர் சில்லுகளை, மாற்றி மீண்டும் 2021 மார்ச் 08 திகதி ரூபா 224,000 செலவில் ஜப்பானில் உற்பத்தி செய்த 50,000 கிலோ மீட்டர்கள் செலுத்த முடியுமான டயர் சில்லுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கொள்வனவு செய்த டயர் சில்லுகளை 02 மாதங்கள் 27 தினங்களில் 8,936 கிலோ மீட்டர்கள் செலுத்திய பின்னர் மீண்டும் 2021 மே 27 திகதி வெளிநாட்டில் உற்பத்தி செய்த டயர் சில்லுகளை மாற்ற ரூபா 231,600 செலவிடப்பட்டிருந்தது. இவ்வாறு மாற்றிய டயர் சில்லுகளை இனங்காண டயர் சில்லுகளை கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் அட்டயர் சில்லுகளில் குறிப்பிட்டுள்ள இனங்காணும் இலக்கத்தை லொக் புத்தகத்திலும் குறித்திருக்கவில்லை. | டயர் சில்லுகளின் இனங்காணும் இலக்கததை இதற்கு முன்னரும் லொக் புத்தகத்திற்கு உட்படுத்தி இல்லையெனவும், தொழிநுட்ப உத்தியோகத்தர் அறிக்கை பிரகாரம் பழைய டயர் சில்லுகளை களஞ்சியத்திற்கு ஒப்படைத்துள்ளதாகவும், ஏற்பட்டுள்ள குறைகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு விடய பொறுப்பு அலுவலர்களை அறிவூட்ட நடவடிக்கை எடுப்பதாக. | டயர் சில்லு உற்பத்தியாளர் உறுதி செய்யும் குறைந்தபட்ச தூரத்தையேனும் செலுத்தி பொது மக்களின் நிதியை உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்த வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளிற்காக திட்டமொன்று தயாரித்திருக்காததுடன், சபை அதிகார எல்லையினுள் மீளாய்வாண்டில் 660 டொன்கள் அளவு திண்மக் கழிவுகளை வெளியிட 14 ஊழியர்களிற்காக ரூபா 6,234,942 தொகையும், வாகனம் ஒன்றிற்காக ரூபா 691,121 தொகையுமாக கூட்டுத் தொகை ரூபா 6,926,063 ஆன கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டு இருந்தது. சபைக்கு சொந்தமாக ஒழுங்கான கழவு முகாமைத்துவ முறைமையொன்று இல்லாதிருந்த காரணத்தால் உக்கலடையும் கழிவுகளை ஒன்று திரட்டி இரத்தினபுரி மாநகர சபையின் கழிவுக் கொட்டிலிற்கு ஒப்படைத்திருந்தன. | 2019 ஜுலை முதல் 2021 ஜுலை வரை ரூபா 312,000 தொகையொன்று இரத்திரபுரி மாநகர சபையின் கழிவுக் கொட்டிலிற்கு செலுத்தியுள்ளதாகவும், 14 தொழிலாளர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த போதும் நிரந்தரமாக கழிவுகளை திரட்ட சாரதியொருவர் மற்றும் சுகாதார தொழிலாளர் இருவரையுமே ஈடுபடுத்தியுள்ளதாக. | தேசிய கொள்கையிற்கு இணங்க கழிவு முகாமை செய்யும் முறைமையொன்றை தயாரித்து செயற்படுத்த வேண்டும். |